## மாணவரின் வருகை ஒழிப்பு பின்வரும் வகைகளில் நடைபெறுகிறது:

1. **சுகயீனம்/காயப்படல்**
2. **அனுமதி பெறாமல் பாடசாலை வருகை ஒழிப்பு**
   உங்களுக்குத் தெரியாமல் உங்கள் பிள்ளை பாடசாலை ஒழித்தார்
3. **பாடசாலை செல்ல மறுத்தல்**
   நீங்கள் முயற்சி செய்தாலும் உங்கள் பிள்ளை பாடசாலைக்குச் செல்ல விரும்பவில்லை
4. **பாடசாலை விலக்குதல்**
   உங்களது அனுமதியுடன் உங்கள் பிள்ளை பாடசாலைக்கு செல்லவில்லை. உதாரணமாக குடும்ப விடுமுறை நாட்கள், குழந்தை பராமரிப்பு, வீட்டில் பெற்றோருக்கு உதவி செய்தல், வீட்டுத் தொழிலில் வேலை செய்தல்.




# பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பது நல்லதல்ல

மேலதிகத் தகவல்களுக்கு பாடசாலைகள் அவற்றின் DE&T பிராந்தியக் கந்தோரை தொடர்பு கொள்ளலாம்.



www.sofweb.vic.edu.au/wellbeing/welfare/attend.htm

State Government Victoria
Department of Education & Training

# பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பது நல்லதல்ல

## பெற்றோருக்கும் கவனிப்பாளருக்கும் உரிய வருகைத் தகவல்கள்

பாடசாலை உங்களுக்கு ஒரு சிறந்த வருங்காலத்தைக் கொடுக்கும்



Tamil

Knowledge&Skills
Building a Future
Victoria
The Place To Be

# வழக்கமாக கேட்கப்படும் கேள்விகள்

## பெற்றோர்/கவனிப்பாளர் என்ற வகையில் எனது பொறுப்புகள் என்ன?

பின்வருவனவற்றை உங்கள் பிள்ளை அனுசரிப்பதை உறுதிப்படுத்துங்கள்:

- எல்லாப் பாடசாலை நாட்களிலும் பாடசாலைக்கு வருகை தரல்
- ஒவ்வொரு நாளும் நேரத்திற்கு வருகை தரல்

பின்வருவனவற்றை நீங்கள் அனுசரிப்பதை உறுதிப்படுத்துங்கள்:

- உங்கள் பிள்ளை பாடசாலை ஒழித்தால் அதற்குரிய விளக்கத்தை பாடசாலைக்கு கொடுங்கள்
- உங்கள் பிள்ளை பாடசாலைக்கு செல்ல விரும்பாவிட்டால் பாடசாலையைத் தொடர்பு கொள்ளவும்
- பாடசாலை வேளையல்லாத நேரங்களில் வைத்தியர் மற்றும் பல் வைத்தியர் சந்திப்பு வேளைகளை வைத்துக்கொள்ளுங்கள்
- உங்கள் மகன்/மகள் இன் தனிப்பட்ட கடைக்குச் செல்லும் பயணங்கள் மற்றும் பிறந்தநாட் கொண்டாட்டங்களை பாடசாலை வேளைகளல்லாத நேரங்களில் ஒழுங்கு செய்யுங்கள்
- சிறிய காரணங்களுக்காக உங்கள் பிள்ளை பாடசாலை ஒழிப்பு செய்வதை அனுமதிக்க வேண்டாம்.

## ஒழுங்காக பாடசாலைக்கு வருகை தருவது முக்கியமா?

- ஆம் – முதல் நாள் தொடக்கம். உங்கள் பிள்ளை முதனிலைப் பள்ளியில் அடிப்படைத் திறன்களை தவறவிட்டால் அவர்களது கல்விக்கு பங்கம் ஏற்படும்
- கல்வி குழம்பாமல் இருப்பதற்கு ஒழுங்காக பாடசாலைக்கு வருகை தருவது அத்தியாவசியம். ஒழுங்கான கல்வி வருங்காலத்தை பலப்படுத்தும்
- பாடசாலைகள் உங்கள் பிள்ளைகளுக்கு பிரதானமான சமூக திறன்கள் குறிப்பாக தோழமையை மேம்படுத்தல், குழு வேலை, தொடர்புத் திறன்கள், மற்றும் ஆரோக்கியமான சுய நம்பிக்கை ஆகியவற்றை விருத்தி செய்ய உதவும்.

## நான் பாடசாலையின் மூலம் எவற்றை எதிர்பார்க்க முடியும்?

- பாடசாலை வருகையை மேற்பார்வை செய்தல் ஒவ்வொரு வாரமும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்
- பெற்றோர் என்ற வகையில் உங்கள் பிள்ளை பாடசாலைக்கு செல்வதை உற்சாகப்படுத்த உதவும் உத்திகள்.

## எனது பிள்ளை பாடசாலைக்கு செல்ல மறுத்தால் அல்லது அனுமதியின்றி பாடசாலைக்கு செல்லாவிட்டால் எனக்கு என்ன உதவி கிடைக்கும்?

பாடசாலை பல வகைப்பட்ட ஆதரவுத் தெரிவுகளை வழங்கும்:

- ஆசிரியர் ஆதரவளித்து ஆலோசனை வழங்கும் ஸ்தானத்தை வகித்து மாணவனோடு சேர்ந்து வேலை செய்வது
- பாடசாலை நலம்புரி ஒருங்கிணைப்பாளர் மாணவனோடு சேர்ந்து வேலை செய்வது
- உங்களது பிள்ளைக்கு ஒரு அனுபவமுள்ள அறிவுரையாளர் வழங்குவது.
- பிரச்சினையை கண்டுபிடிக்கவும் பெற்றோர்கள் ஊடாக வேலை செய்ய வீட்டுத் தரிசிப்புகள்.
- ஏன் உங்கள் பிள்ளை பாடசாலைக்கு செல்ல விரும்பவில்லை என்பதற்கான காரணங்களைக் கண்டுபிடித்தல்
- உங்கள் பிள்ளை பாடசாலைக்கு செல்வதை உற்சாகப்படுத்துவதற்கு உதவும் உத்திகள்
- பிள்ளை பாடசாலைக்கு செல்வதை உற்சாகப்படுத்த அக்கறையூட்டும் திட்டத்தை விருத்தி செய்வது
- சமூக நிறுவனங்களுடன் இணைத்தல்.

## நான் எனது பிள்ளையை ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு அனுப்ப வேண்டுமா?

ஆம், இல்லாவிடில்:

- உங்களது பிள்ளை சுகயீனமுற்றால் அல்லது காயப்பட்டால்
- உங்களது பிள்ளைக்கு ஒரு தொற்று நோய் இருந்தால்
- பாடசாலை ஒழிப்பிற்கு வேறு ஏதாவது உண்மையான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் வழங்கப்பட்டால்.

## எனது பிள்ளை ஒரு TAFE, VET அல்லது சமூக நிகழ்ச்சி ஒன்று செய்தால் எனது பிள்ளை பாடசாலை ஒழிப்பு செய்ததாக குறிக்கப்படுமா?

- இல்லை – அது பாடசாலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தால்.

## எனது பிள்ளை விளையாட்டு நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டிருந்தால் என்ன நடக்கும்?

- இல்லை – அது பாடசாலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தால்.

## எனது பிள்ளை பாடசாலை ஒழிப்பு செய்தால் நான் பாடசாலைக்கு அறிவிக்க வேண்டுமா?

- ஆம் – உங்கள் பிள்ளையின் நலத்திற்காக. கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்திட்டம் ஒரு வருகைக் கொள்கை உள்ளது. ஆசிரியர்களும் பாடசாலைகளும் மாணவரின் பாடசாலை ஒழிப்பைக் கண்காணிக்க வேண்டும்.

